www.Padasalai.Net www.CBSEtips.in

Coimbatore District

**12**

Register No.

# காலாண்டுத் தேர்வு – 2023

மணி : 3.00

## பொதுத் தமிழ்

மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

I. பலவுள் தெரிக 14 x 1 = 14

1. 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
(க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்து (உ) பொதிகையில் தோன்றியது (ங) வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை..........
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
4. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு அ) செய்யாமல் செய்த உதவி ஆ) தினைத்துணை நன்றி இ) பயன் தூக்கார் செய்த உதவி ஈ) செய்ந்நன்றி
5. "குமிமாற்று" எந்த துறையோடு தொடர்புடைய சொல் அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
6. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ – அனைத்தும்
7. அன்பும் அறமும் – இலக்கணக்குறிப்புத் தருக.
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை
8. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
9. "காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை – இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
10. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க. அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல் ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளிவிட்டு எழுதுதல் இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல் ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்
11. தமிழில் திணைப்பாகுபாடு..........அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
12. உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் – இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
13. "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) தமிழ்விடுதூது ஆ) சிந்தாமணி இ) திருக்குறள் ஈ) நன்னூல்
14. பொருத்துக. அ) திருவல்லிக்கேடிணி ஆறு – (1) மாவலிபுரச் செலவு ஆ) பக்கிங்காம் கால்வாய் – (2) கல்கோட்டை இ) பல்லாவரம் – (3) அருங்காட்சியகம் ஈ) எழும்பூர் – (4) கூவம்
அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

### பகுதி – II பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 2 = 6

15. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
16. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
17. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் – யார்க்கு?
18. 'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்தலமோங்கு கந்தவேளே' – தொடருக்குப் பதவுரை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 2 = 4

19. அக்காலத்துக் கல்விமுறையில் மனைப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.
21. எழுத்தாணிகளின் வகைகளைக் கூறுக.

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7 x 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. விலை, விளை, விழை
23. வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக. * சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) தாமரை ஆ) தலைமை
25. கலைச்சொல்லாக்கம் தருக. அ) Conviction ஆ) Lobby
26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.
27. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) அருங்கானம் ஆ) செல்லிடத்து



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

29. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பொலிந்தான் ஆ) நினைக்கின்ற
30. திருவளர்சொல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2 x 4 = 8

31. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
32. "மூன்றான காலம் போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக.
33. "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
34. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2 x 4 = 8

35. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் – விளக்கம் எழுதுக.
37. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
38. சென்னை அறிவின் நகரம் என்றழைப்பதற்கான சான்றுகளைத் தருக.

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 3 x 4 = 12

39. அ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும் – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக. **(அல்லது)**
ஆ) நிரல் நிறை அணியைத் தகுந்த உதாரணத்துடன் விளக்குக.

40. அ) இலக்கிய நயம் பாராட்டுக.

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது ;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்கு வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !
– பாரதியார்

41. அ) வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)** ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.
42. **தமிழாக்கம் தருக.** 1. A new language is a new life 2. The limits of my language are the limits of my world 3. Learning is a treasure that will follow its owner everywhere. 4. Knowledge of language is the doorway to wisdom
42. **காதுகேளாதவர்களுக்கான மாற்று வினா**
**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அ வள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராக உள்ளனர். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மொழியே வளர்ப்பவரும் மக்களே, மொழியால் வளர்பவரும் மக்களே. **வினாக்கள் :** 1) மொழி என்பது யாது? 2) பெற்ற தாயின் முதல் வேட்கை யாது? 3) மொழி வளர்ச்சிக்கு எதனோடு தொடர்புடையது? 4) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.
43. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
1. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ளவேண்டும். 2. எத்தனைமுறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்று செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய் நிறை தன்னம்பிக்கை கொள்.

பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைத் தொகுத்து எழுதுக. **(அல்லுது)**
ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**
ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க. **(அல்லது)** ஆ) 'சாலை விபத்தில்லாத தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?

பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6
அ) துன்பு உளது எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) அறிவு என முடியும் குறட்பாவை எழுதுக.



Coimbatore District
Kindly send me your study materials to padasalai.net@gmail.com